யாழ்ப்பாணம்.
வைக்கப்பெற்றது
JUN 1998
பொது சன நூலகம்
24 JUN 1998
யாழ்ப்பாணம்

REGISTERED AS CATHOLIC WEEKLY. P.197

பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

பாதுகாவலன் ஒவ்செற்றில்

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் புதிய டிமை 1/2) ஒவ்செற் இயந்திரத்தில் பாதுகாவலன் பத்திரிகையை கணணி முறையில் ரைப் செய்து ஒவ்செற் முறையில் அச்சிடத் தொடங்கிள்ளோம் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். யாழ் நகரில் ஒவ்செற் முறையில் அச்சிடப்பட்ட முதல் பத்திரிகை என்ற பெயரையும் எமதாக்குகிறோம். (ஆ-ர்)

23 JUN 1998
23 JUN 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஒன்பது ஆண்டுகளின் பின் புனித அந்தோனியார் திருவிழா

* ஆயரோடு ஒன்பது குருக்கள் திருநாட் திருப்பலி
* சமய வேறுபாடின்றி 1500ற்கும் அதிக மக்கள் கலந்துகொண்டனர்
* அந்தோனியார் சுரூபம் அற்ற ஆலயத்தைப் பார்த்து மக்கள் பெரும் அதிர்ச்சி

கடந்த 14. 06. 98 ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆயர் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது 9 ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற மேற்படி விழாவில் ஆயரோடு கூட 9 குருக்கள் பங்குபற்றினர் ஏறக்குறைய 1500 பேர் கலந்து கொண்டனர் என ஊறணி மண்ணின் மைந்தர் R.C.X. நேசராஜா அடிகள் காவலனுக்குக் கருத்து தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் சமய வேறுபாடின்றி அங்கு குழுமியிருந்த மக்கள் ஆலயத்தின் நிலையைப் பார்த்து கவலையும் வேதனையும் அடைந்தனர். தங்கள் பாதுகாவலர் புனித அந்தோனியாரின் சுரூபம் இல்லாதிருந்தது பலருக்கும் பெரும் அதிர்ச்சியாய்ப் போய்விட்டது என்றார். ஆயர் அவர்கள் தமது மறையுரையில் நம்பிக்கையை இழந்து விட வேண்டாம் நிரந்தர அமைதியோடு நாம் மீண்டும் குடியமர வருவோம் என்று நம்பிக்கை ஊட்டினார் என்று அவர் குறிப்பிட்டார்.

அருள்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் முயற்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவானது ஊறணிப் பகுதி எப்படி இருக்குமோ என்ற ஏக்கத்தில் இருந்த மக்களுக்கு அங்கு செல்லவும் பாதுகாவலருடைய திருநாளை கொண்டாடவும் ஊரைப் பார்வையிடவும் சந்தர்ப்பம் கொடுத்தது. கூரை சீற்றுக்கள் அற்ற அந்தோனியார் சுரூபம் இல்லாத ஆலயத்தையும், நொறுங்குண்ட வீடுகளையும், நீண்ட பரந்த வெளியாய்ப் போயிருக்கும் குடிமனைப்பிரதேசங்களையும் பார்த்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தனர் என்றாலும், மாதத்திற்கு ஒரு தடவையாகிலும் அங்கு போய்த் திருப்பலி நிறைவேற்றி அதன் வழி எம்முடைய இடங்களுக்கு திரும்பிப் போகக் கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் பலர் மனதிலும் உதிப்பதாக நேசராஜா அடிகள் மேலும் தெரிவித்தார்.

சிதறல்கள்

அன்பிய நாடக நிகழ்வு

யூபிலி ஆண்டிற்கு எம்மை தயார்ப் படுத்தும் இவ் வேளையில் அன்பியத்தினூடாக எம்மைப் புதுப்பித்து பகிர்ந்துவாழும் இறை சமூகமாக புதிய யுகத்தினுள் நுழைய அழைப்பு விடுத்து, அதற்கான சிந்தனையை காட்சிமயப்படுத்தி பங்குகள் தோறும் அன்பிய நாடக நிகழ்வை நடாத்தி வருகிறார்கள் புனித சவேரியார் குரு மட மாணவ கலைக் குழுவினர்.

இதன் முதலாவது நிகழ்வு கொழும் புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய முன்றலில் 14.06.98 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. சிதறல்கள் என்னும் பெயரில் நடாத்தப்பட்டுவரும் இவ் அன்பிய நாடகத்தை அருள்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் தலைமைதாங்கி நடாத்துகின்றார் ஆரம்ப நிகழ்வின் போது சவேரியார் குருமட அதிபர் அருள்திரு ஜே. நீக்கிலஸ் அடிகள், அருள்திரு எட்வின் வசந்தராஜா அடிகள் ஆகியோர் வருகை தந்திருந்தனர். பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் யாழ் நகரின் பங்குத்தளங்களில் இந்நாடகம் நிகழ்த்தப்படும் என குருமட மாணவ கலைக்குழுவினர் தெரிவித்தனர்.

எஸ்.ஜேசுதாஸன்
கொழும்புத்துறை

ஆசியத் திருச்சபை தனக்கே உரித்தான ஆன்மீக இயலிலும், சமய உணர்விலும் இன்னும் ஆழப்படுத்தப்படவேண்டும்

ஆசிய ஆயர்களுக்கான விசேட பேரவையில் இலங்கை ஆயர்கள்

ஆசிய ஆயர்களுக்கான விஷேட பேரவை ஏப்பிரல் 1998இல் வத்திக்கான் நகரில் கூடியபொழுது இலங்கையில் இருந்து கலந்துகொண்ட ஆயர்கள் தம் கருத்துக்களைத் தெரிவித்த போதே மேற்படி கருத்து வெளியிடப்பட்டது.

துரதிஷ்ட வசமாக அனேக ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் மேலைத்தேய மதம். இது குடியேற்ற நாடுகளுடன் ஆசியாவிற்கு வந்தது என்ற சரித்திர தழும்பு உள்ளது. சமயத்தை விரும்பாதவர்களது மிகைப்படுத்தப்பட்ட இந்த எண்ணமானது எம்பணிக்குப் பெரும் தடையாக வுள்ளது என இலங்கை ஆயர் பேரவைத் தலைவர் ஒஸ்வட் கோமிஸ் ஆண்டகை கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் பொழுது ஆசியாவில் பிறந்த துறவற சபைகள் தமது கலாச்சாரப் பின்னணியையும் ஆசிய வாழ்க்கை முறையையும் சமய உணர்வையும் பாதுகாத்து ஞான வாழ்விலும், ஆசிய இறை பணியிலும் ஒரு வசந்த காலத்தை உணர ஆர்வம் ஊட்டப்பட வேண்டும் என்றார்.

ஆசிய மக்கள் ஆழ்ந்த ஞான இயலின் மனிதர்களாகவும், இறைவனால் தொடப்படக் கூடியவர்களாகவும் இருப்பதால் ஆசிய கிறிஸ்தவப் பணியானது செபத்திலும், தியானத்திலும் பொங்கி வழிய வேண்டுமென பேரருள்திரு வியான்னி பெர்ணாண்டோ ஆண்டகை தெரிவித்தார். அவர் மேலும் திருச்சபை தனது பரந்த சமூகப்பணி மத்தியில் ஆசியாவில் நற்செய்தி அறிவிக்கப்படுவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை எனக் கவலை தெரிவித்தார்.

ஆசிய ஆயர்கள் பேரவை (FABC) யினால் உருவாக்கப்பட்டு வளர்த்து வரப்படுகின்ற (ASIPA) போன்ற கிறிஸ்தவ அடிப்படைக் குழுமமுறைகளை, முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று பேரருள்திரு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை வேண்டினார். இந்த அசிப்பா முறையானது நாம் எதிர் நோக்கும் பல பிரச்சினைகளுக்கு விடையாகும். புதிய நூற்றாண்டின் அனைத்து சவால்களுக்கும் அசிப்பாவை பயன்படுத்துவோம் என்றார்.

உலகளாவிய ரீதியில் தமிழாய்வு செய்து உலகத் தமிழாராய்ச்சி மன்றங்களை நிறுவி, தமிழின் பெருமையை உலகறியச் செய்தவர் தனிநாயகம் அடிகள்

– பேராசிரியர் அ. சண்முகதாஸ் –

அண்மையில் யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நான்காவது தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப்பேருரையை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். சங்க இலக்கிய ஆய்வும் தனிநாயக அடிகளாரும் என்ற தலைப்பில் தமது பேருரையை ஆற்றிய பேராசிரியர் அவர்கள் மேலும் தெரிவிக்கும்போது சங்க இலக்கியங்கள் தமிழிலே எழுந்த தொன்மையான இலக்கியங்கள் இச் சங்க இலக்கியங்களே தமிழ் மொழியின் பழமையையும். சிறப்பையும் உல கிற்கு அறியச் செய்யும் சிறந்த சான்றுகளாக உள்ளன. இந்த வகையிலே தான் தனிநாயகம் அடிகளின் தமிழ்த் தூதுப் பணியிலே சங்க இலக்கிய ஆய்வு தனியிடத்தைப் பெற்றுள்ளது.

உலகிலே உள்ள தமிழரும். வேற்று மொழியாளரும் ஓரிடத்திலே கூடி ஆய்வு செய்யவும் அடிகளாரின் ஆய்வுப் பணியிலே பலரும் தொடர்பு கொள்ளவேண்டும் என்பதற்காகவுமே உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை தனிநாயகம் அடிகளார் ஆரம்பித்து வைத்தார் என்று கூறினார். நினைவுப் பேருரையின் அவைத் தலைவராக திருவாளர் A.S.அகஸ்ரின் உரையாற்றும் பொழுது தனிநாயகம் அடிகள் உலக மொழிகளிலே ஏறத்தாழ 15 மொழிகளில் புலமை பெற்றவர் எனவே இவர் ஒருவர் தான் "யாம்

தனிநாயகம் அடிகள்

அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதொன்றும் காணோம்" என்று உளசுத்தியுடன் கூற முடியும் என்றார்.

புதிய நூற்றாண்டின் அனைத்து சவால்களுக்கும் 'அசிப்பா'

அண்மையில் வத்திக்கானில் நடந்தேறிய ஆசிய ஆயர்களுக்கான விசேட பேரவை ஆசியத் திருச்சபை வரலாற்றில் ஒரு சிறப்புப் பதிவை ஏற்படுத்தியுள் ளது. புனித இராயப்பர் பேரால யத்தில் இப்பேர வையைத் தொடக்கிவைத்த 2ஆம் அருளப்பர் சின் னப்பா "2000 ஆம் ஆண்டின் உதயத்தில் நிற்கும் ஆசியாவின் பல்வேறுபட்ட மக்களுக்கும், சமூகங்க ளுக்கும், மதங்களுக்கும், கலாச்சாரப் பாரம்பரியங்க ளுக்கும், வரலாற்று வளத்திற்கும், முதுபெரும் ஞானத்திற்கும் இருப்பிடமான ஆசியாவைக் கட்டியெ ழுப்ப இப்பேரவை ஒரு அடித்தளமாகும்" என்றார்.

இனிவரும் காலத்தில் ஆசிய திருச்சபை யில் நடக்கப் போகும் அநேக விடயங்களுக்கு இப் பேரவைதான் ஒரு ஆரம்பமாக இருக்கப்போகிறது என்பதை திருத்தந்தை அவர்கள் மிகவும் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். இலங்கைத் திருச்சபை யைப் பொறுத்த வரையிலும், இலங்கையில் இருந்து கலந்து கொண்டவர்கள் இந்த உண்மையை உணர்ந்தே கருத்துத் தெரிவித்துள்ளனர். அங்கு தெரிவிக்கப்பட்ட மூன்று முக்கிய கருத்துக்களை நாம் மீள வலியுறுத்த விரும்புகின்றோம். அநேக ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் ஒரு மேலைத் தேயமதம் என்ற குறை பரவலாக உள்ளது. சமயத்தை வெறுப் பவர்களது மிகைப்படுத்தப்பட்ட இத் தப்பெண்ணமா னது ஆசியாவில் எமது பணிக்கு பெரும் தடையாக உள்ளது.

கத்தோலிக்க திருச்சபையானது ஆசியாவில் பரந்த சமூகப்பணியில் ஈடுபட்டாலும் நற்செய்தி அறிவிக்கும் பணியில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆசிய மக்கள் இறையுணர்விற்கும், தியாகத்திற்கும் இயல்பாகவே அதிக நாட்டம் காட்டுகின்றவர்கள் என்பதால் ஆசியாவில் கிறிஸ்தவப் பணியானது செபத்திலும், தியானத்திலும் பொங்கி வழியவேண் டும். 'அசிப்பா' என்கின்ற **'ASIPA'** அடிப்படைக் கிறிஸ்தவ குழும முறைகளை இன்னுமதிகமாக நாம் அறிந்து அதன்படி வாழ முற்பட்டால் புதிய நூற்றாண் டில் நாம் எதிர்நோக்கப்போகும் பல சவால்களுக்கு பதிலைக் காணமுடியும். இலங்கைத் திருச்சபை சார் பில் பேரவையில் கலந்துகொண்ட இலங்கை ஆயர் மன்ற தலைவர் பேரருள்திரு ஒஸ்வல்ட் கோமிஸ், கண்டி ஆயர் பேரருள்திரு யோசவ் வியான்னி பெர்னாண்டோ, இலங்கை ஆயர்மன்ற துணைத் தலைவர் பேரருள்திரு கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆகியோரே மேற்படி கருத்துக்களை முறையே தெரிவித்தவர்களாவர்.

ஆசிய மண்ணிற்குச் தனிச் சிறப்புக்கள் உண்டு. உலக மக்கள் தொகையில் 3/5 பகுதியினர் ஆசியாவில் வசிக்கின்றனர். இறைமக்கள் தொகை யில் 1/2 பகுதியினர் ஆசியாவில் வாழ்கின்றனர். உலகப் பெருமதங்கள் பலவற்றிற்கு ஆசியா பிறப் பிடமாக இருந்தது என்பது சரித்திர உண்மை. ஆசியாவில் பிலிப்பைன்ஸ் நாடு தவிர மற்றைய எல்லா நாடுகளிலும கிறிஸ்தவம் சிறுபான்மையான தாகவே இருக்கின்றது. கிறிஸ்தவம் ஆசிய மண் ணில், ஆசிய மயப்படுத்தப்பட வேண்டும் என்பது ஒரு புதிய சிந்தனையல்ல. கடந்த காலங்களில் ஆசிய மண்ணின் வளத்தையும் வாய்ப்புக்களையும் தன்னு டையதாக்கி மண்ணின் மதமாக மாற பல முயற்சி களை மேற்கொண்டதென்பது உண்மை. கிறிஸ் தவம் இனியும் எம் மண்ணில் அந்நிய மதமல்ல என்பதை நிரூபிப்பதும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு புதிய வழிமுறைகளைத் தேடுவதும் நாம் நற்செய்தி அறிவிப்பாளர்களாக மாறுவதும் அவசிய மாகும். புதிய நூற்றாண்டின் அனைத்து சவால் களுக்கும் 'அசிப்பா' போன்ற அடிப்படைக் கிறிஸ்தவ குழும முறைகளை விடையாக்குவோம். முன்னெடுத் துச் செல்வோம்.

வைகாசி வணக்கமாதச் சிந்தனை

ஒவ்வொரு மறை மாவட்டத்திலும் வைகாசி மாதம் வரும்போது தேவ மாதாவை அதிகமாக நினைவுகூரு கின்றோம். சில ஆண்டுகளுக்கு முன்பு ஆலயங்களில் வைகாசி 1ம் திகதியிலி ருந்து 31ம் திகதிவரை தேவதாயாரு டைய சுரூபத்தை அலங்கரித்து பூக்க ளால் சோடனை செய்து மெழுகு வர்த்தி ஏற்றிவைத்து செபமாலைத் தியானமும், தேவமாதாவின் வரலாறு அவ ஆற்றிய புதுமைகள் வாசிக்கப் பட்டும் வந்தது. தற்காலத்தில் இந்த நிகழ்வுகளெல்லாம் ஏனோ தானோ என்ற மாதிரியும் அதற்கு மதிப்பளிப் பதும் குறைந்து காணப்படுகிறது.

தேவமாதாவை நாம் சிந்திக்கும் போது அவள் உள்ளத்தாய்மையாக இருந்தாள். இறைவன் அவரிடம் வாசம்பண்ணினார். ஆகவே அந்த அன்னையை எம் எல்லோருக்கும் உண்மையான உயிருள்ள தாயாகத் தந்தார். அவளை எந்நாளும் நினைவு கூருவதோடு வைகாசி மாதத்தில் விசேட விதமாக அவளை வேண்டு வோம். பத்திமா பதியில் வைகாசி 13ம் திகதி காட்சி கொடுத்த அந்தத்தாய் ஐப்பசி வரை காட்சி கொடுத்து எந் நாளும் உங்களோடு தாயாக இருக் கிறேன் என்று காண்பித்து அநீதி ஒழிந்து நீதி நிலைக்க அடிக்கடி செபித்து வாருங்கள் என்று கூறி னாள். அந்த அன்னையை நம்பி வாழ்ந்தோரை அவள் ஒருபோதும் கைவிட் போவதில்லை. பரிசுத்த திருச்சபையை தேவதாய் எல்லாக் காலத்திலும் எல்லாவித ஆபத்திலும் இருந்து காத்து வந்துள்ளார்.

1571ம் ஆண்டில் பிற மதத்தவர்கள் கிறிஸ்த வர்களை அடக்கி அவர்களின் உரிமைகளைப் பறித்து கிறிஸ்தவ தேவாலயங்களை தங்கள் வசப்படுத்தி பொய்த் தேவர்களை நிறுத்து வந்தது மல்லாமல் உலகமடங்கிலும் சில பட்டணங்களை தங்கள் ஆளுமைக்கு உட்படுத்த முனைந்த போது அந்தக் கால கட்டத்தில் திருச்சபையை ஆண்டுவந்த பாப்பிறை 5ம் பியுஸ் திருச்சபைக்கு இக்கட்டான சோதனை வந்தபோது தளராத நம் பிக்கையோடு தேவமாதாவை நோக்கி 153 மணிச் செபத்தை உலகம் பூராக செபிக்கும்படி கிறிஸ்தவர்களுக்கு கட் டளை பிறப்பித்து இருந்தார். அதன் படி தேவமாதாவை மக்கள் வேண்டி நிற்க பிற மதத்தவர்கள் பின்வாங்கிப் போக திருச்சபை காப்பாற்றப்பட்டு கிறிஸ்தவ தேவாலயங்களும் கிறிஸ்த வர்களும் சுதந்திரமாக வாழ்ந்ததாக வரலாறு உண்டு. ஆகவே கடின புயலினால் கிழம்பிய சமுத்திரத்தைப் போல் இருக்கும் இந்த உலகில் வரப்போகிற இக்கட்டுக்களை நீக்கி எல்லா மனித இதயங்களிலும் அமைதி யும் மனித நேயமும் வளர பரமனிடம் பரிந்து பேசுகிறவளாய் இருந்தருள் ளும். மாதாவழியாக ஆண்டவரிடம் செல்வோம்.

அருளப்பு கொரிணியஸ்

எதிர்பாருங்கள் அடுத்த இதழில் இருந்து வெளிவர இருக்கிறது.
"கேளுங்கள் . . . சொல்லுகிறோம்" ஒரு புதிய பகுதி. உங்கள் (திருமறை சார்ந்து) கேள்விகளுக்கு நாம் பதில் சொல்ல இருக்கிறோம். கேள்விகளை அனுப்புங்கள்
(ஆ-ர்)

யூன் மாத திருவழிபாட்டு நாட்காட்டி

திகதி	வாசகம் 1	பதிலுரை	வாசகம் 2	நற்செய்தி	திகதி
1	2 இராய 1:2-7	91:1-2,14-16		மாற் 12 :1-12	1
2	3:12-15,17-18	90:2-4,10,14,16		,, 12:13-17	2
3	2 தீமோ.1:1-3,6-12	123:1-2		,, 12:18-27	3
4	,, 2:8-15	25:4-5,8-10,14		,, 12:28-34	4
5	,, 3:10-17	119:157,160,161,165,166,168		,, 12:35-37	5
6	,, 4:1-8	71:8-9,14-17,22		,, 12:38-44	6
7	பழ. 8:22-31	8:3-8	உரோ. 5:1-5	அரு 16:12-15	7
8	I அரசர் 17:1-6	121:1-8		மத் 5:1-12	8
9	,, 17:7-16	4:1-4,6-7		,, 5:13-16	9
10	,, 18:20-39	16:1-2,4,5,8,11		,, 5:17-19	10
11	பணி 11:21-26 ; 13:1-3	98:1-6		,, 10:7-13	11
12	1அர 19:9,11-16	27:7-9,13-14		மத். 5:27-32	12
13	எசா.61:1-3	89:1-4, 20-21,24-26		லூக் 10:1-9	13
14	ஆதி.14:18-20	110:1-4	1 கொரி.11:23-26	லூக் 9:11-17	14
15	1 அரச 21:1-16	5:1-2,4-6		மத் 5:38-42	15
16	,, 21:17-29	50:1-4,11		,, 5:43-48	16
17	2அரச 2:1, 6-14	31:19-22,23		,, 6:1-6,16-18	17
18	சீராக் 48:1-14	97:1-7		,, 6.7-15	18
19	எசே.34:11-16	23:1-6	உரோ 5:5-11	லூக் 15:3-7	19
20	இசை.61:9-11	1 சாமு 2:1,4-8		,, 2:41-52	20
21	சக்கரி12:10-11; 13:1	63:1-5,7-8	கலா. 3:26-29	,, 9:18-24	21
22	2அரச17:5-8,13-15,18	60:1-3,10-11		மத். 7:1-5	22
23	19:9-11,14-21,31-36	48:2-4,10-11		,, 7:6,12-14	23
24	இசை 49:1-6	139:1-3,13-15		லூக் 1:57-66,80	24
25	2 அரசர் 24:8-17	79:1-5,8-9		மத். 7:21-29	25
26	,, 25:1-12	137:1-6		,, 8:1-4	26
27	புலம் 2:2,10-14,18-19	74:1-7,20-21		,, 8:5-17	27
28	1 அரச 19:16,19-21	16:1-27-11	கலா.5:1,13-18	லூக்.9:51-62	28
29	பணி 12:1-11	34:1-4		மத். 16:13-19	29
30	ஆமோ 3:1-8, 4:11-12	5:4-8		,, 8:23-27	30

வாசகர் கருத்து

பாதுகாவலன் ஆசிரியருக்கு புது வருட இரு மலர்கள் கிடைக்கப் பெற்று வாசித்து உணர்ந்து இன் புற்றேன். அனைத்து ஆக்கங்க ளும் சூப்பர். ஆசிரியரே நன்றி.

"காவலன்" நத்தார் புதுவருட சிறப்பு மலர் 1997, இன் ஆக்கங் களின் விமர்சனம் யாழ் நகர்வரத் தூண்டியது. அடுத்த இதழுடன் 10 இதழ்கள் இணைத்து அனுப்ப வும். பணம் அனுப்பும் Bank No ஐயும் அறிவிக்கவும். உங்கள் பேப்பருக்கு ஏகப்பட்ட கிராக்கி.

எல்லா செய்திகளும், அமலமரித் தியாகிகளின் 150 ஆண்டு பணி நிறைவு மலர் அருமை. யாழ் மறை நிலையையும், அதன் பொறுப்பாளர்களையும் இங்கு வாழ் எம்மவர் மனக் கண்முன் நிறுத்துகின்றது. உங்கள் சேவை கத்தோலிக்க இறையரசு பரவத் தேவை.

திருமதி. எஸ். இம்மானுவேல்
கனடா

அதிகம் புழுகவேண்டாம். எங்கள் பத்திரிகை கனடாவில் மேலும் பரவவழி செய்வீர்களாகில் அதுவே போதும். 10 பத்திரிகைகள் உங்க ளுக்கு இனி அனுப்பி வைப்போம்.

(ஆ-ர்)

அறிமுகம்

வறுமையின் வடி வழகன்

புனித பிரான்சீஸ் அசிசியின் வாழ்க்கைச் சுருக்கம்

நாலாசிரியர்
தாவீது நாதன்

வெளியீடு
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்

பணமே பலம் என்று பறந்தடிக்கும் உலகில்
செல்வத்தை, செல்வாக்கை
யேசுவுக்காக
அவரின் செய்திக்காக
உதறிய உத்தமரின் கதை இது.
வறுமைக்கோலத்தை
வரித்தெடுத்து
வீதியெங்கும் ஏழ்மையின்
ஏற்றமிகு தலைவனின்
எளிமையான வாழ்வை
பூவுலகிற்கு புரியவைத்த புண்ணியனின் கதை இது
தொழுநோயாளரைச் தேடிச் சென்று
அரவணைத்து அன்பு முத்தம் கொடுத்து
அவர் உள்ளம் குளிர வைத்த
உயரிய மனிதனின் உயர் கதை இது.
கிறிஸ்துவுக்காக உயிர் கொடுத்த
ஏழ்மைச்சகோதரர் என்ற
சிறிய சகோதரரை
சிறிய சகோதரிகளை
மூன்றாம் சபையினரை
பார் எங்கும் அனுப்பிய
வறுமையின் வடிவழகனின் கதை இது.
சாந்தியின் கருவியாக மாற
உள்ளுணர்வுடன் உணர்ந்து படியுங்கள்.

வறுமையின் வடிவழகன் என்ற புனித பிரான்சீஸ் அசீசியாரின் வாழ்க்கைச் சுருக்க நூல் வெளி வந்துள்ளது.

(ஆ-ர்)

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றிய

ஆன்மீக வளர்ச்சிக்கான செயற்பாடுகள்

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியமானது இப்பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைத் தொடரும் கத் தோலிக்க மாணவர்களினது ஆன்மீக வளர்ச்சியினை மைய மாகக் கொண்டு யாழ் ஆயரின் பாதுகாப்பில் கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றது. இவ் ஒன்றியமானது யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவு னியா, திருகோணமலை போன்ற பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த கத்தோலிக்க மாணவ அங்கத்தவர்களைக் கொண்டு செயற்படுகின்றது. இவ் ஒன்றியத்தின் இவ்வருடத் திற்கான புதிய செயற்குழுவானது கடந்த 10.05.98 அன்று நல்லாயன் நடு நிலையத்தில் எமது ஆன்மீக வழிகாட்டி அருள்தந்தை சூசைநாதன் அடிகளாரின் தலைமையில் தெரிவாகியது. இச் செயற்குழுவில்

தலைவர்	–	திரு.எஸ். ஆல்றின் வெஸ்லி
செயலர்	–	செல்வி.எஸ்.செய்றா பெனடிக்ற்
இளம் பொருளர்	–	திரு.பி.யூடி றமேஸ் ஜெயக்குமார்
உபதலைவர்	–	திரு.எஸ்.ஜெயராஜ்
உப செயலர்	–	திரு.பி.றொபின்சன்
துணைப்பொருளாளர்	–	செல்வி ஜேம்ஸ் ஆன்மேரி பீரிஸ்
பத்திரிகை ஆசிரியர்	–	திரு.அ. அன்ரன் றோய்

என்பவர்களுடன் ஒவ்வொரு துறையில் ஒவ்வொரு வருட பிரதிநிதிகளுடன் மொத்தம் 22 அங்கத்தவர்களைக்கொண்டு புதிய செயற்குழு அமைக்கப்பட்டது. புதிய செயற்குழுவின் முதல்கூட்டத்தில் ஆண்டுக்கான திட்டமொன்று வகுக்கப் பட்டது. இந்தவகையில் எமக்கு முன்பிருந்த செயற்குழுவின் சிறந்த வழிநடத்துதலின் அடிப்படையில் எமது செயற்குழு வும் மன்றச் செயற்பாடுகளை முக்கியமாக வளர்ச்சியை மையமாகவும் ஏனைய சில செயற்பாடுகளையும் மேற்கொள் ளத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் மூன்று பிரிவினைக் கொண்டு வகுக்கப்பட்டது.

1 மாணவர்கள் தம் தனியான, குழுவான ஆன்மீக வளர்ச்சிக்கான செயற்பாடுகள்
- கருத்தமர்வுகளை நடாத்துதல்
- குழுக்கலந்துரையாடல் நடாத்துதல்
- வேதாகம செப வழிபாடுகள், வகுப்புகள் ஒழுங்கு செய்தல்
- தியான நிகழ்வுகள் நடாத்துதல்

2. மாணவர்கள் சமுதாயமட்டில் கொண்டுள்ள பொறுப்புக் களையும் கடமைகளையும் வளம்படுத்தும் செயற் பாடுகள்
- இரத்ததானம் வழங்குதல்
- பின்தங்கிய இடங்களில் சிரமதானம் செய்தல்
- மருத்துவமனை நோயாளிகளைத் தரிசித்தல்
- வயோதிபர் இல்லங்களைத் தரிசித்தல்
- ஊனமுற்றோரை சந்தித்தது ஆறுதல்கூறி உதவி செய்தல்
- கல்விசார் உதவிகளை வழங்குதல்
- கல்வியில் பின்தங்கிய இடங்களுக்குச் சென்று கல்வி யின் முக்கியத்துவத்தை அவர்கள் உணரும் வண்ணம் விழிப்புணர்வு செயற்பாடுகள் செய்தல்
- சுகாதாரம் சம்பந்தமாக உதவி வழங்குதல்
- சுகாதாரத்தில் பின்தங்கிய இடங்களில் சுகாதாரச் சேவையை நடமாடும் சுகாதாரச் சேவை அமைப்புக் களுடன் சேர்ந்து செய்தல்

3. ஒன்றிய வளர்ச்சிக்கான நிதி
- மேற்படி செயற்பாடுகளுக்கான நிதியை நாடகம், இசை நிகழ்ச்சி, கொடிவாரம் போன்றவற்றை நடாத்தித் திரட்டு வதென்று தீர்மானிக்கப்பட்டது.
- அத்துடன் கத்தோலிக்க மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதியம் ஒன்றை ஆரம்பித்து அதன்மூலம் வறிய பல் கலைக்கழக மாணவர்கள் கல்வியைத்தொடர உதவும் முகமாக நலன் விரும்பிகள் பழைய பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோரிடம் இருந்து நிதி உதவி கோரல்

போன்ற செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வ தெனவும் அத்துடன் வழமையாக நடைபெறும் கத்தோலிக்க மாணவர்களின் வரவேற்பு, பிரிவுபசார நிகழ்வுகளையும் சிறப்பான முறையில் செய்யவேண்டும் என்றும் புதிய செயற்குழு தீர்மானித்துள்ளது. எமது இந்த திட்டங்களை நல்ல முறையில் செயற்படுத்த இறைவனின் துணையும் எமது ஒன்றிய மாணவர்கள் மற்றும் அனைவரது ஒத்து ழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

செயலாளர்
யாழ்.பல்கலைக்கழக கத்தோலிக்க
மாணவர் ஒன்றியம்

இயேசுவின் மதுரமான இருதயமே எங்கள் சினேகமாயிரும். இதயத் தில் சாந்தமும் தாழ்ச்சியும் உடையவரான இயேசுவே எங்கள் இதயத்தை உமது இதயத்தைப் போலாகப் பண்ணியருளும்.

யாழ் மறைக்கோட்ட இளைஞர் ஒன்றிய நிர்வாக சபை

யாழ். மறைக்கோட்ட இளைஞர் ஒன்றியத்தின் 1998ஆம் ஆண்டு 1 வது கூட்டம் அகவொளி நிலையத்தில் நடைபெற்றது. யாழ். மறைக் கோட்ட பங்குகளில் இருந்து ஒன்றுகூடிய இளை ஞர் ஒன்றிய பிரதிநிதிகளை யாழ் மறைக் கோட்ட இளைஞர் ஒன்றியக் காப்பாளர் அருள்திரு M. V. E. இரவிச்சந்திரன் அவர் களும் மறைக் கோட்ட முதல்வர் அருள்திரு A.C. கிறிஸ்தோபர் அவர்களும் அன்புடன் வரவேற் றனர். இக்கூட்டத் தின்போது நிர்வாக சபைத் தெரிவுகள் பின்வருமாறு இடம் பெற்றன. தலை வர் செல்வன் A. S. நிஷாந்தன், செயலாளர் செல்வி S. G. ரூபவசந்தினி, பொருளாளர் செல் வன் J. ஜோண் கியூபேட், உப தலைவர் செல்வி M. றீற்றம்மா, உப செயலாளர் V. யூடா சதீஸ்குமார்.

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் : கலைத்துறை செல்வி S. சாள்ஜினி மிராண்டா, விளையாட்டுத் துறை செல்வன் J. வோல்வின், கல்வித்துறை செல்வி R. விஜி, பொது சனத்தொடர்பு செல்வி K. நிஜா, சமூகமுன்னேற்றம் செல்வன் A. தனேந் திரன், ஆன்மீகம் செல்வன் A. இருதய நேசன்

S. G. றூபவசந்தினி
செயலாளர்

திங்த இடத்தில் சிரிக்கவும்

மறைக்கல்வி வகுப்பு நடந்துகொண்டிருந்தது. அருட்சகோதரி வகுப் புக்களை நடத்திக்கொண்டிருந்தார். ஆண்டுதோறும் பாஸ்காவிழாவைக் கொண்டாட ஜெருசலேமிற்கு இயேசுவின் பெற்றோர்கள் போவார்கள். இயேசு விற்கு 12 வயது நடக்கும்போது அவரும் பெற்றோருடன் ஜெருச லேமுக்குப் போனார். (லூக். 2 : 41–52) என்ற பகுதியை வாசித்து விளக் கிய பின்னர் அருட்சகோதரி மாணவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். இயேசு ஏன் தாய் தந்தையோடு ஜெருசலேம் தேவாலயத்திற்குப் போனார்? ஒரு சிறிது நேர அமைதியின் பின்னர் ஒரு சிறுவன் எழுந்து சொன்னான். "இயேசுவுக்கு ஆச்சி இல்லாதபடியால் தாயோடும், தந்தை யோடும் ஜெருசலேம் தேவாலயத்திற்குச் சென்றார்."

பிள்ளை

மனித நேயம்

மனித நேயம்
மனித நேயம்

புலர்ந்த புதுப்பொழுதும் பூஞ்சோ லையும் அதில் சிரிக்கும் பூக்கள் கூட்டமும் அன்று ரவிக்கு ஏனோ எதிரிகளாகவே தோன்றின. ஆயி னும் மனதை மகிழ்ச்சியில் உறங்க வைத்தபடியே தபால் நிலையத்தை நோக்கி விரைந்தான். காதைச் செவிடாக்கும் அந்தச்சத்தம் காத்து நிற்குமென அவன் கனவில்கூட எண்ணியதில்லை. "சம்பளத்தைக் கூட்டு! ரவியா? இந்த நரியன் வேண்டாம். புதிய அதிபர் வேண் டும்!" அவனது நண்பன் றெனிதான் அந்த முன்னணி கூக்குரல் வீரன். ரவிக்கு தன் காதுகளை நம்பவே முடியவில்லை.

* * *

அந்தக் கதவுச் சத்தம் ரவியின் தூக்கத்தைக் கலைக்க, "யார் இது, இந்த இருட்டில் என் தூக்கத் தைக் கலைப்பது?" என்று சட்டென வார்த்தைகளைக் கக்கினான்.

'கொஞ்சம் பணம் கொடுத்திடுங்க என் மனைவி பிரசவ வேதனையில் துடிக்கிறாள். கார் பிடிக்க கையில் பணம் இல்லையையா" கெஞ்சலான தொனியில் வந்த அந்த அறிமுக மான குரலின் திசையை நோக்கி தன் கண்களைத் திருப்பினான் ரவி. அவை தன் கண்கள்தானா? என ஒருகணம் வியந்தான். "உண்ட வீட் டிற்கு இரண்டகம் செய்கிற றெனிக்கா பணம்" என மனதிற்குள் ஒரு போராட்டம்.

"பகைவனுக்கு அன்பு" ஆண்டவரின் அந்த அமுத மொழி அவனது நெஞ்சில் எதிரொலித்தது. "நானும் கிறிஸ்துவின் சீடனாக வாழவேண்டு மல்லவா?" எதிரொலியில் உருவெ டுத்த உள்ளத்து அன்பை உறவி னில் பகிர்ந்திடத் தீர்மானித்தவ னாய் அவனுக்கு வேண்டிய பணத்தை வழங்கினான் ரவி.

* * *

"றெனி இன்னும் 5 நிமிடங்கள் தாமதமாகியிருந்தால் உம் பிள்ளை யையும், மனைவியையும் உயிரு டன் பார்த்திருக்கவேமாட்டீர்" என்ற வைத்தியரின்வார்த்தைகள் அவனை ஒருகணம் சிந்திக்க வைத்தது.

* * *

"ரவி, என்னை மன்னிச்சிடப்பா. என் பிள்ளையையும், மனைவியையும் காப்பாற்றிய உம்மையா நான நரியன் என்று திட்டினேன்? இப்பவே எம் போராட்டத்தை நிறுத்தி விடு கின்றேன்" என றெனி சொல்லி முடிப்பதற்குள், "இல்லை றெனி, உம் பின்னாலே இன்னும் பல தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வியர்வையில் நான் வாழ விரும்பவில்லை. அவர்களு டைய நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற நான் ஆவன செய் வேன். உமக்கு நான் செய்தது ஒரு சாதாரண மனித நேயப்பணி. உதவி நாடியவனுக்கு உதவுவது தான் உத்தமன்வழி" என அன்பு ததும்பக் கூறினான்.

சிறுகதை

"வளரட்டும் மனிதம்
மலரட்டும் மனித நேயம்"

ம. பிரான்சிஸ்க்
யாழ். புனித சவேரியார் இருதயக்கல்லூரி

1997 யூன் 15 "மெசெஞ்சர்' பத்திரிகையில் மத்தியு பேறோஸ் என்பவருடைய ஆங்கிலத் தொகுப்பின் தமிழாக்கம்.

"கிறிஸ்தவன் யார்?"

1) நீராலும் தூய ஆவியாலும் திருமுழுக்குப் பெற்ற வன்
2) கிறிஸ்துவையும் நற்செய்தியையும் நம்புபவன்
3) தன் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கோரி பாவ சங்கீர்த்தனம் செய்பவன்
4) ஊதாரிப்பிள்ளை உவமையைப் பின்பற்றித் தான் பாவியென ஏற்றுக்கொள்பவன்.
5) பாவத்திற்கு வருந்துவதில் சக்கேயுவின் முன் மாதிரியைப் பின்பற்றுபவன்.
6) பாவத்துக்கு அடிமையாகாதிருக்கப் பாவம் புரிவ தைத் தவிர்ப்பவன்.
7) வாளால் மடிவதைத் தவிர்க்க வாளால் சீவிப் பதை விலக்குபவன்
8) சோதனை, பாவம், துன்மாதிரி–இவற்றிற்குக் கார ணமாயிருப்பதைத் தவிர்ப்பவன்.
9) பாவம், தீயசிந்தனை, கொலை, விபச்சாரம்,களவு, பொய், ஆவலாதி, முதலியவற்றால் தன்னை மாசு படுத்தாதவன்.
10) மலைப்பொழிவில் உள்ள எண்ணங்கள், தத்து வங்களின்படி வாழ்பவன்.
11) ஆண்டவன் யேசு கற்பித்த மன்றாட்டைச் செபிப் பவன்.
12) திருப்பலியில் கிறிஸ்துவின் இறுதி இரவுணவில் பங்குபற்றி நற்கருணையில் அவரின் உடலை யுண்டு குருதியைப் பருகுபவன்
13) இறையரசுக்குள் புக குழந்தையின் அப்பாவித் தன்மையுடையவன்.
14) இறைசித்தத்தைச் செய்பவன்.
15) பசித்தவர்க்குணவும் தாகமுற்றவர்க்குப் பானமும் கொடுப்பவன், அன்னியரை வரவேற்று ஆதரிப்ப வன், ஆடையற்றோருக்கு ஆடையளிப்பவன், வருத்தரையும் கைதிகளையும் தரிசிப்பவன்.
16) அப்பத்தால் மட்டுமன்றி இறைவனின் ஒவ்வொரு சொல்லாலும் சீவிப்பவன்

தமிழாக்கம் –செ.தோ. சிறிநாதன்
45/6 களனிக்கை மோள் வீதி மட்டக்குளி
கொழும்பு 15

சிறுவர்களுக்கான

தொடர் குறுநாவல்

ஒரு சிறிய புதுமை

தமிழ் வடிவம் : எஸ். எம். யோசவ்

"ஒரு சிறிய புதுமை" என்ற சிறுவர் குறுநாவலின் முடிவினை எழுதி அனுப்பும் படி கேட்டிருந்தோம். பலர் எழுதி அனுப்பி யிருந்தார்கள். பாராட்டுக்கள். ம. ஜெயேந் திரன், எஸ். வின்சன்ற் மரியசெல்வம் ஆகிய இருவரது முடிவுகளைப் பிரசுரித் திருந்தோம். அனைவரது முடிவுகளையும் போட முடியாமைக்கு வருந்துகின்றோம்.

சிலர், முடிவு எழுதுவது கஷ்டம் என்று தெரிவித்தார்கள். சிறுவரிடம் நாவலுக்கான முடிவு எழுதும்படி கேட்டது சற்று அதிகமாகி விட்டதோ என்று எண்ணு கின்றோம், இருப்பினும் எழுதியவர்கள் முயற்சித்தவர்கள் எழுதுவது கடினம் என்று தெரிவித்தவர்கள் அனைவரின் முயற்சியையும் பாராட்டுகின்றோம்.

1. மரிய சுகந்தி இம்மானுவல்
   யா நாவற்குழி, ம.வி:
   கைதடி
2. வி. ஜே. ஜெயசங்கீதா
   புனித ஜோண் பொஸ்கோ
   வித்தியாலயம்
3. டே.க. அரவிந்தராஜ்
   யாழ் இந்துக்கல்லூரி
4. டீ. கனிஸ்ரா ஆர்த்தி
   வேம்படி மகளிர் கல்லூரி

இதோ! உங்கள் எல்லோரதும் முடிவு சுளிலும் மண்ணைப்போடும் குறுநாவல் தொடர்கிறது. . . . (ஆ—ர்)

முன்கதைச் சுருக்கம்

அசிசி நகரில் அசிசியாரின் கல்லறை உண்டு. அங்கு பெப்பினோ என்னும் ஏழை அனாதைச்சிறுவன் வசித்தான்.வைலெற்றா என்பது அவனது கழுதை. பெப்பினோ விற்கு எல்லாமே வைலெற்றா என்ற கழுதை தான். கழுதைக்கு எல்லாமே பெப்பினோ தான்.வைலெற்றாவிற்கு திடீரென வருத்தம் வந்தது. பெப்பினோவிற்கு மிகுந்த சோகம் ஏற்பட்டது. மிருக வைத்தியர்கள் எல்லோ ரும் கைவிட்டனர். பங்குத் தந்தை டமிக்கோ அடிகளார் அசிசியாரைப் பற்றியும், அவரின் புதுமைகளைப் பற்றியும் அடிக்கடி பெப்பி னோவிற்கு கூறியிருந்தார். அசிசியார் பேராலயத்திற்குக் கொண்டு சென்றால் தன் கழுதை குணம்பெறும் என்ற நம்பிக் கையுடன் மெதுவாக பேராலயத்திற்கு கொண்டு சென்றான். அனுமதி மறுக்கப் பட்டது. சோர்ந்தே போய்விட்டான். உலகமே சுற்றியது. பங்குத்தந்தை டமிக்கோ அவர்க ளிடம் ஓடினான். பேராலய பரிபாலகரிடம் உத்தரவு கேட்கும்படியும் 100 வருடங்க ளுக்கு முன்பு வாசலைத் திறந்துவிடும்படி யும் கேட்க ஆலோசனை கூறியனுப்பினான்.

டமிக்கோ அடிகள் அடிக்கடி பெப்பினோ வுக்கு அசிசியாரைப் பற்றி நிறையக் கூறி இருந்தார். புனித அசிசியார் உயிரோடு அசிசிநகரில் நடமாடுவதுபோல அப்படி நிதர்சனமாகப் புனிதரைப்பற்றி அடிகளார் கதை கதையாகக் கூறுவார்.

தொழுவம் நடாத்தும் நிக்காலோவின் மகன் ஜியான்னி முன்பு கூறிய செய்தியும் பெப்பினோவிற்கு /அதிக ஊக்கமளித்தது. நோயுற்ற தன் செல்லப்பூனையை புனித அசிசியின் பதிக்கு எடுத்துச் சென்று குண டைந்தது என்று ஜியான்னி சொன்ன தைக்கேட்ட அவன் எப்படியும் வைலெற் றாவையும் அத்திருத்தலத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும், அதனால் அது உயிர் பிழைக்கவேண்டும் என்று ஆவல்கொண்டி ருந்தான். வைலெற்றா இறந்துவிடுமாயின் அவனுக்கு எல்லாமே இழந்ததுபோன்ற நிலைதான் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

மின்டிபோட்டு எழுப்புவது போல மிகத் தெண்டிமையாக வைலெற்றாவை எழுப்பி பெருமுயற்சியுடன் அசிசியின் ஒடுக்கமான வீதிவழியாக மெல்ல மெல்ல நடத்திச் சென்று அசிசியாரின் பேராலயம் அமைந் திருந்த மலைக்குன்றுக்கு எப்படியோ கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டான். அழகிய இரட்டைவாயில்களைக் கொண்ட அப்பே ராலயத்தின் கீழ்ப்பகுதியில் அன்று கட மையில் இருந்தவர் பேர்னாட் என்ற துறவியாவார்., அவர்தான் ஆலயத்தினுள் செல்பவர்களுக்கு அனுமதி வழங்குபவர். பேர்னாட் புதிய துறவி; மிகவும் கண்டிமை உடையவர்.

"பக்தியற்ற நாடோடிப் பயலே, இந்த அசுத்தப் பிராணியை அழைத்துக்கொண்டு வெளியே போ; இந்த மிருகத்தை ஆல யத்துக்குக் கொண்டுவர உனக்கு எவ் வளவு துணிச்சல்; பூச்சியமான இப்புனித ரின் திருத்தலத்தில் ஒரு கழுதையைக் கொண்டு வருவது அநாச்சாரம்" என்று கடிந்து எரிந்து விழுந்தார் துறவி.

மக்கள் ஒருவர் ஒருவராய் ஏறிச் செல்லும் ஒற்றைவழி மாடிப்படிகளில் இந்த நாற்கால் விலங்கு எப்படி ஏறிச் செல்லும் என்றுகூட பெப்பினோ சிந்தித்தும் பார்க்கவில்லை. முட்டாள்த்தனமான ஒரு யோசனைதான் அது. கட்டளைப்படியே கழுதையை இழுத்துக் கொண்டு ஆலய வாயிலை விட்டு வெளியேறினான் சிறுவன். ஓரமாய் நின்று கழுதையில் சாய்ந்தபடியே தனது எண்ணம் நிறைவேற வேறு என்ன செய்யலாம் எனச் சிந்திக்கலானன். வெளியே விரட்டப்பட்டதனால் அவன் சிறி தும் மனம் தளரவில்லை.

சிறு வயதிலேயே தனது பெற்றோரை இழந் துவிட்ட பேரதிர்ச்சி அவனைச் சில காலம் வருத்தியபோதும் தன்னைப் போன்ற பல ரோடு ஒப்பிடுகையில் தனது தற்போதைய நிலைபரம் மோசமானதல்ல என பெப் பினோ எண்ணிக்கொண்டான். தனது சீவி யத்திற்கு ஏதோ ஒரு வகையில் தொழில் என்று ஒன்றிருக்கிறதே மனத் திருப்தி யோடு வாழ்ந்து வந்தான். ஆனால் வைலெற்றாவுக்கு நோய் பிடித்ததனால் தனது தொழிலிற்கே இப்போது ஆபத்து வந்துவிட்டது என்ற கவலை அவனை வாட்டத்தொடங்கியது. எப்படியாவது அசி சிப்பதியின் திருவடியில் தனது கழுதை யைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் அது தப்பாமல் குணமடைந்துவிடும் என்ற நம்பிக்கை அவனிடம் வேரூன்றியிருந்தது.

தொடரும்

விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம்

அருள்திரு ம. இ. பயஸ்

இத்துணை மேன்மையான படைப்பின் காரணா யார்?

எலோயீம் / இறைவன் தான் படைப்பின் கர்த்தா. ஒன்றுமில்லாமையில் இருந்து (வெறு மையாய் இருந்த இடத்தில்) பலவற்றைப் படைத்தார். படைத்தபொழுது நேரம் ஆரம்ப மாகியது. இறைவன் படைத்தவை அனைத் தும் நல்லவையே. பல கடவுள்கள் கோட்பா டுள்ள வாதம் பின்னடையக் கூடியதாக ஒரே கடவுள் ஒரே இறைத் தன்மைக் கோட்பாடு நிலைபெற படைப்பின் கதை இடம்பெறு கிறது. இறைவனுக்குப் பெயரில்லை (யாவே, எலோயீம், கடவுள்) உருவமில்லை, வய தெல்லை இல்லை, நிறமில்லை.

சகலத்தையும் அறிந்த, சகல வல்லமை யுடைய இறைவனைப் போற்றிப் புகழ்ந்து ஆராதிப்போம்.

இஸ்ரவேல் மக்களுக்கு கடலும் இருளும் தீய சக்திகளின் அடையாளமாயிருந்தது. இறைவ னின் ஆவி இவைகள்மேல் அசைவாடி புதுப்படைப்பை உருவாக்குகின்றது. ஆதி யிலே வார்த்தை இருந்தார். (அரு. 1 : 1) அவர் வழியாகவே அனைத்தும் உண்டாயின. (அரு. 1 : 3) அவர் கட்புலனாகாக் கடவுளின் சாயல் (கொலோ. 1 : 15)

முதல் நாளில் இறைவனின் செயல் ஒளியை உண்டாக்கியது என வசனங்கள; 3-5 தொடர்ந்து வருணிக்கின்றன. ஒளி நல்லது ஆயினும் இருளுக்கும் இடம் உண்டு. ஒளி யில் செயலாற்றுகின்றோம். இருளில் ஓய்வு பெறுகின்றோம். படைப்பின் முதல் நாள், கிழமையின் முதல் நாள் ஞாயிறு, உயிர்த்த இயேசுவின் முதல்நாள் "வார்த்தை உண்மை யான ஒளி"(அரு.1 : 9, 9 :5) மேகங்களிலுள்ள நீரும் நிலத்தில் உள்ள நீருமாக பிரிகின்றன. வான மண்டலத்தின் அழகு தான் என்னே! கண்ணுக்குப் புலப்படுகின்ற பரலோகம்!

மக்களுக்கு வீடுகட்டி உணவும் தயாரித்துக் கொடுக்கிறார், இறைவன். நீர்பிரிய மண் தோன்றுகிறது. விதைகள் கனிகளுடன் பசும் புற்பூண்டுகள், இனமினமான மரஞ்செடி கொடிகள் பூத்துக் குலுங்கின. உயிரினங்களும், மானிடரும் வாழ்வதற்கு ஆயத்தமாயிற்று பூமி. வெறுமையான் இறைவார்த்தையால் பொலிவு பெற்றது. மக்கள் வாழ்வதற்கு வேண்டியவற்றை நாம் ஆக்குகின்றோமா? அன்றேல் அழிக்கின்றோமா?

"ஒவ்வொருவனையும் ஒளிர்விக்கும் அவ் வொளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது. (அரு. 1 : 9) பகல் இரவு வேறுபட பருவ காலங்களையும், நாட்களையும், ஆண்டுகளை யும் குறிப்பிட வான்வெளியில் இருந்து பிர காசிக்கும் ஒளி உண்டாக்கப்பட்டது. நாம் ஒளியில் நடமாட (அரு. 9 : 9) பணிபுரிய (அரு. 9 : 4) வானத்தைப் பார்த்து செயல்பட (மத். 16 : 2-3) இறைவன் ஒளிதரும் சுடர் களையும் விண்மீன்களையும் படைத்தார்.

நீர்த்திரளிலிருந்து உற்பத்தியாகி அசைந்து உலாவும் உயிரினங்களையும், பறந்து திரியும் பறவைகளையும் இறைவன் படைத்தார். சிறிய பூச்சி புழுக்களில் இருந்து விதம்விதமான உயிரினங்கள் தோன்றின. உயிர் அழிந்து போகலாம் எனவே என்றும் நீடித்து இருக்கத் தக்கதாக அவை பல்கிப்பெருகி வானத்தையும் நீரையும் நிரப்பக் கூடியதாக ஆசீர்பெற்றன. பல வகையான காட்டு விலங்குகளையும், வீட்டுப் பிராணிகளையும், பூமியின் ஊர்வன வற்றையும் படைத்தார்.

"நமது சாயலாகவும், பாவனையாகவும் மனித னைப் படைப்போமாக என்று இறைவன் ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். தனக்கு நிகரான வருடன் அன்பு (நட்பு) கொண்டு உறவாட முடியும். மனிதன் படைப்பின் தலைவனாகின்றான். உண்மையாகக் கூறப் போனால் இறைமகன்தான் அவருடையசாயல் கடவுளுடைய உள்ளியல்பின் சாயலாக விளங் கும் இயேசு (எபிரே. 1 : 3). நாம் இறைவ னின் வார்த்தையை பெறத் தகுதியுள்ளவர் களாகப் படைக்கப்பட்டோம். எமக்கும் இறை வனுக்கும் உறவு உண்டாக இடம் உண்டு. முழு உண்மையையும், அறியும் வல்லமை எமக்கும் உண்டு. "எங்களுக்குள்ள நட்புறவோ பரமதந்தையோடும் அவர் மகன் இயேசுக் கிறீஸ்துவோடும் உள்ளதாகும்.(1 அரு. 1 : 3) நாம் கடவுளின் மக்கள் என அழைக்கப்படு கின்றோம். (1அரு. 3 : 1-6) நீங்கள் பல்கிப் பெருகுங்கள், பூமியைக் கீழ்ப்படுத்துங்கள் உண்ணுங்கள், அனைத்தையும் ஆண்டு நடத் துங்கள் என ஆசீர்வதித்தார். (1 : 29-31) எல் லாமே மிகவும் நன்றாய் இருந்தன. கடவுள் தாம் படைத்தவற்றை நோக்கியதுபோல் எமது பணிகள், சேவைகள், படைப்புகள் அனைத் தையும் நாளாந்தம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டாமா?

கோடி அற்புதரின் புதுமைகள்

புனித அந்தோனியார் நூலிலிருந்து...

அந்தோனியார் உண்மையிலேயே பெரும் புனிதர். அவருக்காக இறைவன் அநேகப் புதுமைகளை நிகழ்த்தினார். ஒருமுறை அவர் பெரும் கூட்டமாக வந்த மக்களுக்குப் போதித்துக் கொண்டி ருந்தார். திடீரென்று பெரும் புயல் வந்தது. மழையும் பெய்யத் துவங்கியது. மக்கள் கலைந்துபோக விரும்பினர். ஆனால் அந்தோனியார் "ஒன்றும் ஆகாது, நீங்கள் அப்படியே இருங்கள்" என்றார். கனத்த மழை பெய்தபோதிலும் ஒருவர்மீதும் ஒருதுளி நீர் பட வில்லை.அந்தோனியார் தன் மறையுரை யைத் தொடர்ந்து நிகழ்த்த முடிந்தது.

ஒரு நாள் ஓர் இளம் துறவி சாத்தானின் சோதனைகளால் அலைக்கழிக்கப்பட்டு, அவற்றில் தவறிவிழும் தருணத்தில் இருந்தார். இதைப் பற்றி எவருக்கும் தெரியாது. ஆனால் அந்தோனியார் அவ ரிடம் நேராகச் சென்று, "நாம் இருவரும் நம் அங்கிகளை மாற்றிக் கொள் வோமா?" என்றார். மிகவும் வியந்த அத் துறவி உடனே ஒப்புக்கொண்டார். அங் கிகளை மாற்றிய மறு நிமிடமே அவர் சாத்தானின் சோதனைகளில் இருந்து நிரந்தரமாக விடுபட்டார்.

லிமோகில் இருந்தபோது அந்நாட்டின் அரசரிடம், தனக்காகவும், தன் மடத்துத் துறவிகளுக்காகவும் தானம் கேட்கச் சென்றார். அரசனும் வரவேற்று தன் அரண்மனையில் அவரைத் தங்க வைத் தார். அரசனுக்கு அவர் எவ்வாறு செபிக் கிறார் என்று அறிய ஆவல். ஏனெனில் அவர் உண்மையிலேயே ஒரு புனிதர் என்று நம்பினார். ஆகவே இரவில் அவர் தங்கியிருந்த அறைக்கதவை மெதுவாக திறந்து பார்த்தார். அங்கு அவர் கண் டது என்ன?

அந்தோனியார் ஒளியின் மத்தியில் நின்றுகொண்டு இருந்தார். அவரது கையில் நற்செய்திப்புத்தகம். அதன்மீது குழந்தை இயேசு முழந்தாளிட்டு அந்தோனியாரை நோக்கிப் புன்முறுவலித்து, தன் இரு கரங்களையும் அவரை நோக்கி விரித்தவாறு காணப்பட்டார்!

விசுவாசத்தை மறுத்துத் தவறான பாதையில் சென்று கொண்டிருந்த ரிமினி நகர் மக்களை மனந்திருப்ப அங்கு சென்றார். அவர்களோடு பேச முயன்றபோது, அவர்கள் கேட்க மறுத்து ஓடிவிட்டார்கள். ஏனென்றால் அவர்களின் தலைவன் அந்தோனியாருக்குச் செவிமடுக்கலாகாது என்று கட்டளை இட்டிருந்தான்.

அந்தோனியார் கடலுக்குச் சென்றார். அங்கு மீனவர்களின் படகுகளைக் கண்டார். அவர்கள் தமக்கு செவி சாய்க்க மாட்டார்கள் என்றுகண்ட அவர் கடலுக்குள் இறங்கி, போதிக்கத் தொடங்கினார். ''இறைவனின் படைப்புக்களே, கடல்வாழ் மீன்களே வாருங்கள், இறைவாக்கினைக் கேளுங்கள்'' என்றார். உடனே ஏராளமான மீன்கள் அவரைச் சுற்றி, தம் தலைகளை நீருக்கு வெளியே நீட்டிக்கொண்டு காத்திருந்தன. ''ஆண்டவரைப் போற்றுங்கள். ஏனெனில் நீங்கள் வாழ அவர் நீரினைக் கொடுத்தார். அவருக்கு நன்றி கூறுங்கள். ஏனெனில் நாளும் உங்களுக்கு உண்ண உணவளித்து வருகின்றார்'' என்று போதித்தார். மீன்களெல்லாம், இறைவனைப் புகழ்வது போல தம் செவுள்களை ஆட்டத் தொடங்கின.

மீனவர்கள் என்ன செய்தார்கள்? ஒரு வேளை அந்தோனியாரின் மறையுரையைக் கேட்டு மனந்திரும்பினர். இதனால் வேத விரோதிகளின் கோபம் பன்மடங்காகியது. மீனவர்கள் வெறும் கனவு கண்டிருக்கிறார்கள் என்று கூறினர். அதே சமயத்தில் விஷமிட்டு கொல்லத் தீர்மானித்தனர்.

''எங்களோடுவந்து உணவு அருந்துங்கள். அதன் பின் நாங்கள் உங்களுக்கு செவிமடுப்போம்'' என்றனர். அந்தோனியார் போனவுடன், முதல் உணவுத் தட்டைத் தள்ளிவைத்து ''என்ன நண்பர்களைப்போல நடித்து, எனக்கு விஷம் வைக்கப் பார்க்கிறீர்களா?'' என்றார். வியந்த விரோதிகளின் தலைவன் அலட்சியமாக, ''நீர் சொன்னது சரியே, விஷமிடப்பட்டிருக்கிறது'' என்றார்.

அவன் தந்திரமாக மேலும் தொடர்ந்து: ''இயேசுவின் சீடர்கள் விஷத்தை உண்டாலும் அவர்களுக்குத் தீமை ஏதும் நேராது என்று நற்செய்தியில் கூறப்பட்டிருக்கிறது அல்லவா? நீர் இதை உண்ணும். தீங்கு ஏதும் நடைபெறாவிடில் நாங்கள் எல்லோரும் கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்போம்'' என்றான். ''அப்படிச் செய்ய மறுத்தால்?''–''நீ ஒரு பொய்யன் என்றும், நற்செய்தி ஒரு கட்டுக்கதை என்று காட்டுவாய்''. அந்தோனியார் மிகவும் அமைதியாக ''அப்படியானால் நான் அதை உண்பேன்'' என்றார்.

உணவின் மீது பெரிய சிலுவை அடையாளம் வரைந்துவிட்டு, அத்தட்டில் இருந்த எல்லாவற்றையும் உண்டார். விரோதிகள், அவர் விஷத்தால் நடுநடுங்குவார், வாந்தியெடுப்பார் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. மாறாக அந்தோனியார் மிகவும் ஆரோக்கியத்துடனும் உணவினால் தெம்படைந்தவராகவும் காணப்பட்டார். மீண்டும் ஒருமுறை அந்தோனியார் வென்றுவிட்டார். ஆனால் அவருடைய வெற்றி இயேசுவின் வெற்றி அல்லவா?

பன்னிரு பெருட கொள்ளைக கூட்டத்தார் ஒருநாள் அவருடைய சொற் பொழிவைக் கேட்க மாறுவேடத்தில வந்தனர். அவர்கள் யாரிடம் திருடினார்களோ அவர்களில் சிலரிடையே கலந்து நின்று கேட்டனர். அந்தோனியாரின் சொற்களைக்கேட்டு மனந்திரும்பி, தாங்கள் செய்த குற்றங்களையும் அனைவர் முன்னிலையில் அறிக்கையிட்டனர். இனி நல்ல வாழ்க்கை வாழப்போவதாக உறுதியளித்தனர். பாவப் பரிகாரமாக வெகு தொலைவில் உள்ள உரோமாபுரிக்கு – அங்குள்ள கோவில்களில் செபிப்பதற்காக கால்நடையாகச் சென்றனர்.

அந்தோனியார் எப்படி வாழ்ந்தார்? இயேசுவைப்போல வாழ்ந்தார். அவரைப்போல மிக ஏழையாயிருந்தார். எங்கு சென்றாலும் காசு எடுத்துச் செல்லமாட்டார். ''காசு என்பது விஷமுள்: அதைப்போல் பயங்கரமான பொருள் ஒன்றுமில்லை'' என்பார். இரவில் எங்காவது தரையில் படுத்து உறங்குவார். சில வேளைகளில் வெறும் கல்தான் அவர் தலையணையாம்.

தாழ்ச்சி நிறைந்து காணப்பட்டார். தன் சகோதரர்களின் கால்களைக் கழுவுவார். அவர் அதிபராக இருந்தாலும் எல்லோருக்கும் பணிவிடை செய்வார். என்னே அவரது தாழ்ச்சி – பொறுமை! தன்னை கொள்ளையிட்டவனை அன்போடு அரவணைப்பார். பகைவர்களை வாழ்த்துவார். பாவிகளிடம் அன்போடு பேசுவார். இயேசு எவ்வாறு அன்புசெய்ய வேண்டுமென்றாரோ , அவ்வாறே அனைவரையும் அன்பு செய்தார்.

எண்ணற்ற பாவிகளை அவர் மனம் திருப்பியதால் சாத்தான் கோபத்தால் வெகுண்டு எழுந்தான். ஒருமுறை இரவு, மனித உருவில் வந்து அவர்மேல் விழுந்து கழுத்தை நெரித்தான். அந்தோனியாருக்கு மூச்சுத்திணறியது. அவர் மரிக்கப்போகிறாரா? அல்ல. தேவ அன்னையை நோக்கிச் செபித்தார். விண்ணகத்தாயும் அரசியுமான அவள் உதவிக்கு வந்து, சாத்தானை விரட்டி அடித்தாள்.

அந்தோனியார் மீண்டும் தனது மறையுரைகளை எழுத ஆரம்பித்தார். மிகவும் பெலவீனமாய் இருப்பதை உணர்ந்தார். மேலும் அவரது நோய் அவரை மிகவும் துன்புறுத்தியது. அவரது அதிபர்கள், அவரைப் பதுவையில் இருந்து கிராமப்புறமாக இருந்த ஒரு மடத்திற்கு ஓய்வுக்காக அனுப்பினார். அவரது உச்ச நண்பரான டீசோ இளவரசன் இருந்த ஒரு கிராமத்திற்கு சென்றார். டீசோ மிகவும் மரியாதையுடன் வரவேற்று, ''தாங்கள் எனது மாளிகையில்தானே இருக்கப் போகிறீர்கள்'' என்றார். ''அல்ல''– ''மடத்திலா''– ''அங்குமல்ல–வாருங்கள் இடத்தைச் சுற்றிப்பார்ப்போம்''. டீசோ அவரை ஒரு சிறிய மரத்திற்கு இட்டுச்சென்றார். அங்கு அந்தோனியார் ஒரு பெரிய வாதா மரத்தைக் கண்டார்.

துறவிகளும் பறவைளும் சகோதரர்கள். ஏனெனில் அவர்கள் இருவரும் ஒளிந விரும்பி வானத்தை நோக்கிப் பறக்கத்துடிக்கின்றனர்'' என்று குறிப்பிட்டார். பிறகு வியப்பில் மூழ்கியிருந்த டீசோவிடம் அந்த மரத்தின்மீதே, பலகைகள், மரக்கிளைகளாலான ஒரு சிறு அறையைக் கட்டச் சொன்னார். இளவரசே முன்னின்று தன் கையாலேயே அத்தகைய அறையைக் கட்டிக் கொடுத்தார். அப்பொழுது முதல் அந்தோனியார் அங்கேயே தங்கியிருந்து செபித்துக் கொண்டும், இறைபுகழ் பாடிக் கொண்டும் இருந்தார்.

அங்குள்ள ஏழை உழவர்கள் இதைக் கேள்வியுற்று அம்மரத்தைச் சுற்றி கூட ஆரம்பித்தனர். ''சுவாமி, சுவாமி எங்களுக்கு கடவுளைப்பற்றிக் கூறும்'' என்று கேட்டுக்கொண்டதன் பேரில், தனது அறையைவிட்டு வெளியே வந்து புன்முறுவலுடன் இறைவனைப் பற்றியும் அவர் நம்மேல் கொண்ட அன்பைப் பற்றியும் போதித்தார். அவர் மிக அழகாகப் பேசுவதைக் கண்ட மக்கள் பரவசத்தில் மூழ்கினர்.

அடுத்தநாள் சிறிது உண்பதற்காக தம் மடத்திற்கு போக எண்ணி மரப்படிகள் வழியாக இறங்கி வரும்போது மயங்கி விழுந்தார். அவ்வழியாகச் சென்ற ஒருவர் இதைக்கண்டு, மடத்திற்குத் தெரிவித்தார். பிரான்சிஸ் சபையார் விரைந்துவந்து அவரை ஒரு மாட்டு வண்டியில் கிடத்தி மடத்திற்கு இட்டுச் சென்றார்கள். அந்தோனியாருக்கு உணர்வு வந்தது. மிகவும் அமைதியாகக் காணப்பட்டார். தேவதாயிடம் வேண்டிக் கொண்டார். பின் திவ்விய நற்கருணை உட்கொண்டார். திடீரென்று அவர் தூரத்தில் எதையோ காண்பதுபோல் இருந்தது. விண்ணக ஒளியோடு அவரது விழிகள் பிரகாசித்தன. அருகில் இருந்த குரு, ''நீங்கள் பார்ப்பது என்ன'' என்றார். ''என் ஆண்டவர்!'' என்று மிகத் தாழ்ச்சியோடு சொன்னார். அவரது முடிவு நெருங்கிவிட்டது தெளிவாகியது.

ஒரு குரு அவருக்கு அவஸ்த்தை பூசுதல் அளித்தார். மரிப்போருக்காகச் சொல்லும் செபம் சொல்லப்பட்டது. அந்தோனியார் தம் கைகளை சிலுவை மாதிரி நெஞ்சின்மீது வைத்துச் செபங்களில் பங்கு கொண்டார். பிறகு தம் கண்களை மூடினார். சிறிது நேரம் கழித்து மீண்டும் கண்களைத் திறந்தார். அவர் முகத்தில் ஆனந்தம் குடிகொண்டிருந்தது. எல்லோரையும் பார்த்து புன்முறுவலித்து உயிர் துறந்தார். அன்று 1231ம் ஆண்டு ஜூன் மாதம் 13ம் தேதி கொண்டாடுகிறோம்.

இறை இரக்கப் பெருவிழாவை முன்னிட்டு

எழுதப்பட்ட சிறப்புக்கவிதை

இதயங்களை ஈரமாக்க

படியருகே
வாழ்வின் விடியலுக்காய்
கையேந்தும்
முகம்மறியா மனிதங்களின்
பாத்திரங்களுள்ளே
வீசியெறியும்
சில்லறைகளுடனும்,
கல்லறைகளில்
துன்பியலால்
துண்டாடப்பட்டவர்களுக்காய்
போடப்படும்
ஒரு திரளை
மண்ணுடனும்,
"ஐயோ பாவம் இது"
என்னும்
கண்ணுக்குள் மட்டும்
கரையும் கண்ணீருடனும்
"இரக்கத்தைச்"
சுரந்து
இதயத்தை
சாந்திப்படுத்திக்
கொள்கிறோம்.

ஆனால்
பூமிப் பந்தின்
மானிட இருப்பியலே
மாரியெனப் பொழியும்
இறை இரக்கத்தால்
உயிர்ப்பிக்கப்பட
கொல்கொத்தாவில்
இயேசுவின்
இரத்தம் தேவைப்பட்டதுபோல்
கல்லான – உன்
இதயத்தைக்
கரைத்துக்கொள்ள
கண்களை அல்ல
இதயத்தை
ஈரமாக்கிக்கொள்.
"இரக்கத்தினால்"
ஏனென்றால்
உன்னை
உயிர்வாழச்செய்யும்
இறை இரக்கம்
ஒரு நாள் உன்னைக்
கணக்குக் கேட்கும்.

S.A. அருட்செல்வன்
யாழ். புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி

அருட்தந்தை மேரி பஸ்ரியன் கல்வி உதவித்திட்டம்

(6) ஆறு புலமைப் பரிசில்கள்

1998இல் வெளியான க.பொ.த. சாதாரண பரீட்சை முடிவுகளின்படி, அதிக தகமைகளைப் பெற்று சித்தியடைந்து க.பொ.த உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்ற ஆறு (06) மாணவர்களுக்கு மேற்படி கல்வி உதவித்திட்டம் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு முன் வந்துள்ளது.

06 மாணவர்களும் யாழ்ப்பாணம், மன்னார் மறை மாவட்டங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

மாணவர்கள் தகுதி அறிந்து, பங்குத்தந்தையர்கள் கல்வி உதவித்திட்ட நிர்வாகத்திடம் அவர்கள் பெயர்களைச் சமர்ப்பிப்பார்கள்.

எச் சமயத்தைச் சார்ந்த மாணவர்களும் இப்பரிசில்களுக்கு தகுதி உடையவராகலாம்.

க.பொ.த. உயர்தர வகுப்பைத் தொடர அடிப்படைப் பொருளாதார வசதியற்ற திறமைசாலி மாணவர்களுக்கு மட்டுமே இவ்வுதவி ஆகக் கூடியது இரு (02) வருடங்களுக்கு வழங்கப்படும்.

வழங்கப்படவுள்ள உதவி கல்வி நேரடித் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுகிறது என்பதை கல்வி உதவித்திட்டம் தொடர்ந்து கண்காணிக்கும்.

புலமைப்பரிசில்கள் சம்பந்தமான இறுதி முடிவுகள் எல்லாம் கல்வி உதவித்திட்ட நிர்வாகத்திற்கே உரிமையானது

இவ்வுதவியில் பங்குபெற விரும்பும் மாணவர்களின் மாதிரி விண்ணப்பப் படிவங்களை உங்கள் பங்குத்தந்தையரிடம் பெற்று, 12" × 8" அளவுடைய படிவத்தைத் தயார் செய்து சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து பங்குத் தந்தையரிடம் 31-07-1998க்கு முன்பதாகச் சமர்ப்பிக்கவும்.

ஆயர் இல்லம்
த. பெ. இல. 02
யாழ்ப்பாணம்.
02/06/98

செயலர்
"BEAS"



யூபிலி 2000

என்டா என்ன அண்ணே?

நம் மீட்பராம் யேசுக்கிறிஸ்து இந்த உலகிலே மனிதனாய்ப் பிறந்து 2000 ஆம் ஆண்டு நிறைவை சிறப்போடு கொண்டாட உலகத் திருச்சபை தன்னைத் தயார் செய்துகொண்டிருக்கிறது. இவ்வேளையில் எமது யாழ் மறைமாவட்டத்தில் எத்தகைய ஆயத்தங்கள் நடைபெறுகின்றன என்பதனை அறிய ஆவல் கொண்டிருப்பீர்கள். எனவே யாழ் மறைமாவட்ட யூபிலி ஆயத்தமையக்குழுவின் தலைவர் அருள்திரு. யா. நீக்கிலஸ் அடிகளாரைக்கண்டு கேட்டபொழுது. . .

கேள்வி: இந்த யூபிலி ஆண்டிலே பங்குமக்களிடமிருந்து உங்கள் எதிர்பார்ப்பு என்ன?

பதில்: 2000 ஆம் யூபிலி ஆண்டு பற்றிய விளக்கம் பங்குமட்டத்திலே பரவலாக மக்களை இன்னும் எட்டவில்லை. இவ்வாண்டிலே தூய ஆவியை மையமாகக் கொண்டு பங்குமட்டத்திலே கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. இவற்றிலே கூடிய தொகையினர் பங்குபற்றாவிட்டாலும் ஒரு அடிப்படை விழிப்புணர்வு மக்களுக்கு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுப்பித்தல் என்பதே யூபிலி ஆண்டின் மிக முக்கிய குறிக்கோளாகும். ஒரு அடிப்படையான புதுப்பித்தலுக்கு தூய ஆவியின் உந்து சக்தி இன்றிய மையாதது. தூய ஆவியே எம்மைப் புதுப்பித்து புனிதப்படுத்தியருளும் என்ற விருதுவாக்குடன் எல்லோரும் செயற்படவும், ஈடுபடவும் முயலவேண்டும்.

மேலும் புதுப்பித்தலுக்கு இறை வார்த்தை மையமாகத் திகழ்கின்றது. நற்செய்தியை வாசித்து தியானிக்கவும் செபிக்கவும், குழுப்பகிர்விலே மக்கள் ஈடுபடல் வேண்டும். இறைவார்த்தையில் ஆர்வம் உள்ளோர் ஒருசிலராய் மட்டுமிராது பங்கு முழுவதும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அன்பிய முறைகளை அறிந்து ஒன்றிப்பின் சமூகங்கள் உருவாக வேண்டும்.

ஈற்றில் யூபிலி ஆண்டு வெளி ஆடம்பர கொண்டாட்டத்தை அல்ல மாறாக மனமாற்றத்தையும், ஒப்புரவையும், ஆழமான விசுவாசத்தையும் அன்புறவையும் கொண்ட கிறீஸ்தவ உருவாக்கத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இ. ம. ஜெயசீலன்

போரினால் பிள்ளைகளின் மனங்களும் இதயங்களும் சீரழிக்கப்படுகின்றன

உலகின் எல்லாப் பகுதியிலும் யுத்த மேகங்களும் போர்ச் சூழலும் சமாதான மற்ற நிலையுமே காணப்படுகின்றன. இதனால் கூடுதலாக பாதிப்படைபவர்கள் பிள்ளைகளேயாவார். பிள்ளைப்பருவம் மகிழ்ச்சிகுரிய காலமாக இருக்க வேண்டியதாகும். அது இன்பத்தில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய காலமாகும். எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்புக்களை ஏற்கும் தலைமைத்துவத்திற்குரிய பண்புகளை வளர்த்தெடுக்கவேண்டியவர்கள் என எதிர்பார்க்கப்படும் பருவம் இது. இப்பிஞ்சுப்பருவம் கோரப்போரினாலும் அனர்த்தங்களாலும் சீரழிக்கப்படுவதை யாரும் ஜீரணிக்க மாட்டார்கள். விரும்பமாட்டார்கள். இன்று நடைபெறும் போரினால் இளம் உயிர்கள் கொல்லப்படுகின்றன. உடல்கள் சின்னா பின்னமாக்கப்படுகின்றன. இப்போர் எப்பொழுதும், பிள்ளைகளுக்கும் தீங்கு செய்கிறதே ஒழிய நன்மை பயப்பது அல்ல.

ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல அமைப்பின்படி கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 20 இலட்சம் பிள்ளைகளைக் கொன்றும் 40-50 இலட்சம் பிள்ளைகளை ஊனமாக்கியிருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் 10 இலட்சத்திற்கு அதிகமான பிள்ளைகளை அனாதைகளாக்கியும் 12 கோடி பிள்ளைகளை அகதிகளாகவும் ஆக்கியிருக்கிறது. ஏறத்தாழ 1 கோடி பிள்ளைகளை மன அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியிருப்பதாக அறிய முடிகிறது.

இப்போரிலிருந்து இவர்களை எப்படி மீட்டு எடுக்கலாம்? இறை நம்பிக்கையும், இறைவார்த்தைகளை நம்புவதும் அன்பையும் ஆதரவையும் வழங்குவதன் மூலம் ஓரளவு நிம்மதியை அவர்களுக்கு ஊட்டலாம். பிள்ளைகளை தங்கள் உணர்ச்சிகளையும் நினைவுகளையும் மனதுக்குள்ளேயே அடக்கிவைக்கும் போது மன அதிர்ச்சி யிலிருந்து நீங்கிவிடுவதில்லை. உண்மையில் அவர்களை மனம்விட்டு பேசவைப்பதனால் பிரச்சினைகளைத்தீர்க்கலாம். குடும்பத்திலிருந்தும், பாடசாலையிலிருந்தும், சமுதாயத்திலிருந்தும் வரும் பலமான நெருக்கமான பரிவான அன்பும், ஆதரவும் புரிந்துணர்வுமே பிள்ளைகளுக்கு ஒளிர் மயமான எதிர்காலத்தையும் சாந்தியையும் தரும். நமக்கு விடுதலை தேடித் தந்த எம் பெருமான் கிறீஸ்து பிள்ளைகளை நேசித்தார். அன்புசெய்தார். "விண்ணரசு சிறுவர்களதே அவர்களை வரவிடுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். பிள்ளைகளுக்கு இடறலாய் இருப்போரை வன்மையாகக் கண்டித்தார். அவர்களுக்கு தகாத பழக்க வழக்கங்களை பழக்குவோர் தீமை பயக்கும் கல்வியைப் புகட்டுவோர் அவர்கள் நெஞ்சங்களில் பிரிவினைகளையும் பொறாமைகளையும் விதைப்போர் முதலானோருக்கு பாரதூரமான தண்டனை வழங்க வேண்டுமென்றார்.

எனவே இந்தக் கொடிய யுத்தம், கோரப்போர், யுத்த மேகங்கள் எம்மை விட்டு அகலாதா? முடிவு கிட்டாதா? விடுதலை,சமாதானம் கிடைக்காதா? பயமற்ற நிம்மதியான வாழ்வு வராதா? சுபிட்சமான எதிர்காலம் பிறக்காதா? ஏன்று அங்கலாய்க்கும் பிள்ளைகளுக்கும் எம்மவர்க்கும் மறைவார்த்தை ஒன்றே எம்மை பூரணப்படுத்தும்.

திருமதி. அ.அ. ஒல்லொலெட்
யாழ்ப்பாணம்

புனிதர் . . . (1)



அவர்கள் வாழ்வு

ஒருங்கிணைந்த

இராகம்

விண்ணக வாழ்வில்
2ஆம் ஆண்டு

ஞானப்பிரகாசம்
விசுவாசம்

தோற்றம்
24.04.1920

மறைவு
27.05.1996

எங்கள் அன்புத்தெய்வமான ஐயாவே!
இவ்வுலகை விட்டு ஈராண்டு
சென்றாலும் உங்களை நினைத்து
நித்தமும் உங்கள் பிரிவால்
வாடுகிறோம். உங்கள் ஆன்ம
சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகிறோம்.

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்

மனைவி பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்,
உறவினர்கள்

A/82/98

விண்ணக வாழ்வின்
28-ம் ஆண்டு மலர்வு

மிரியம் சாமினி சில்வெஸ்டர்
அன்னையின் மடியில்
06-10-1962
ஆண்டவன் அரவணைப்பில்
26-06-1970

ஆண்டுகள் இருபத்தெட்டாகி
யும்நின் நினைவுகள் எம் நெஞ்
சங்களை நனைக்கின்றன.
பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார்.

சுருவில்

A/84/98

பருத்தித்துறையில் புதிய ஆலயம்

பேதிறு முனையில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு 09-05-98 சனி உதயம் ஓர் பொன்னான உதயம் ஆகும். அவர்கள் புனித தோமையார் பெயரால் இறைவனுக்கு வழிபாடு செய்யக் கட்டிய புதிய ஆலயம், யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் குருக்கள் புடைசூழ நாடாவெட்டி மந்திரித்து வழி பாட்டிற்காக திறந்துவைக்கப்பட்டது. பருத்தித்துறைப்பங்கு ஒரு நூற்றாண் டுக்குமேல் பழமை வாய்ந்த பங்காகும். பருத்தித்துறை பங்கு பல ஆலயங்களைக் கொண்டது. பங்குத்தந்தையின் ஆலயமாக புனித தோமையார் ஆலயம் விளங்குகிறது. புனித தோமையார் பழைய ஆலயம் 1860-ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு, 1862 ஆம் ஆண்டு வழிபாட்டிற்காக திறந்துவைக்கப்பட்டது. பழைய ஆலயம் சுண்ணாம்புக் கட்டிடமானதால் பழுதடைந்து போனமையினாலும் பங்குமக்களின் வழிபாட்டிற்குப் போதுமானதாயிராது போனமையினாலும் புதிய ஆலயம் அமைக்க தீர்மானித்து பங்குத்தந்தை அருள்திரு றெஜி இராஜேஸ்வரன் பங்குமக்களின் ஒத்துழைப்புடன் புதிய ஆலயம் அமைக்க முயற்சிகளை மேற் கொண்டார். 1982-05-05ம் நாள் யாழ் ஆயர் பேரருள்திரு தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் அடிக்கல் நாட்டப்பட்டது. பங்குமக்களின் மனமுவந்த பொருள் உதவியைக்கொண்டும், உடல் உழைப்பைக்கொண்டும் கட்டிடம் வளர்ச்சி கண்டது. ஆனால் நாட்டில் நடைபெறும் போர்ச் சூழல் காரணமாக பல தடவைகள் வருடக்கணக்கில் வேலைகள் தடைப்பட்டன. இருப்பினும் மக்களின் அயரா உழைப்பின் காரணமாக புதிய ஆலயத்தின் ஒரு பகுதி வழிபாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் அமைய உழைத்த பங்குத்தந்தையர்கள் அனைவரையும் ஆலயப் பங்கு மக்கள் நன்றிப்பெருக்குடன் நினைவுகூருகிறார்கள்.

இ. ம. ஜெயசீலன்

ஆண்டவரே
நீரே
என்னைக்
காக்கும்
கேடயம்
நீரே என்
மாட்சி
என்னைத்
தலை
நிமிரச்
செய்பவரும்
நீரே
(தி.பா.3:3)

நற்செய்தித்தூண்டுதல் போட்டி இல -03

1				2	■	3	
4			■		■		■
	■	■	5		■		■
	■	6		■	7	■	8
9				■		■	
	■		■	10		11	
■	■		■				
■	12		■				

இடமிருந்து ~ வலம்

1. இது உன்னைக் குணமாக்கியது என்றார் இயேசு.
3. இயேசு அத்திமரத்தைச் சபிக்க இது காரணமாயிருந்தது.
4. பார்வையற்றவன் இயேசுவை இவ்வாறு அழைத்தான்.
9. இச் செடியும், கனியும் இஸ்ராயேல் மக்களின் வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையது.
12. நன்மை செய்வதற்கு இது பார்க்கத் தேவையில்லை என் றார் இயேசு. பிற்பகுதி மாத்திரம் வந்துள்ளது.

மேலிருந்து ~ கீழ்

1. இங்குள்ள புழுக்கள் இறக்காதவை.
2. பெரும்பாடுள்ள பெண் குணம் பெறவும், இயேசு வல்ல மையைக் கொடுக்கவும் இவை கருவியாக இருந்தன.
3. இயேசு-ஆயனில்லா ஆடுகள்போல் இருந்த மக்கள் மேல் கொண்ட இதனால் அவர்களுக்குப் போதித்தார்.
5. இறை தந்தைமின் இதனைப் பரப்பவே இயேசு வந்தார்.
6. இயேசு-இங்கெல்லாம் சென்று நோய்களைக் குணமாக் கினார்.
7. யேசு-வானத்தை அண்ணார்ந்து பார்த்து பெருமூச்சு விட்டு இவ் வார்த்தைகளைக் கூற நோயாளி நலமடைந் தான்.
8. சீடர்கள் தவறான கருத்தைக் கொண்டிருந்ததற்கு இயேசு கூறிய இரண்டு காரணிகளில் ஒன்று.
10. நாடு நாட்டையும் அரசு அரசையும் எதிர்க்கும்போது இது ஏற்படுவது தொடக்கமாகும்.
11. இவ்வாறு ஆவோர் முதன்மையாவர் - இயேசு

விடைகளை 30-07-98ற்கு முன்னதாக
'பாதுகாவலன்' புனித வளன் கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
(ஆ - ர்)

இறைவனுக்கு உகந்த மலர்

ஆண்டு ஒன்று நிறைவுற்றாலும் இன்றும் எம் மனங்களில் நீங்கா நினைவாக வீற்றிருக்கின்றார். அருட்தந்தை ஜெபநேசன் அடிகளார் என்றால் யாரும் அதனை மறுக்கமுடியாது. தோட்டத்தில் மலரும் மலர்கள் எல்லாம் ஆண்டவனின் பூசைக்கு காணிக்கையாகுவதில்லை - ஒரு சில மலாகளே ஆண்டவனுக்கு உகந்த மலர்களாகின்றன அவ்வினிய மலராக தன் வாழ்வை ஆண்டவனுக்குகந்த மலராக அர்பணித்து வாழ்ந்தவர்தான் எம் தந்தை ஜெபநேசன் அடிகளார்.

இறைபக்தியும், பிறர்நலமும் கொண்ட உன்னத மலராக, மணம் வீசும் மலராக அவர் வாழ்வு அமைந்தது என்றால் அது மிகைப்படுத்துவதாக யாரும் கூறமுடியாது. மணம் வீசும் மலர்களின் வாழ்வு எல்லாம் பகமை நிறைந்தவையாக இருப்பதில்லை - பல சுமைகள் சோதனைகள், வால்கள், நிறைந்த ஒரு வாழ்க்கைதான் - அடிகளாரின் வாழ்வும் அப்படியாக அமைந்தது என்றால், அதில் எதுவித தவறுமில்லை. கருத்து முரன்பாடுகள், கொள்கைகளில் வேறுபாடுகள், இவைகள் எல்லாம் வரலாற்றின் தேவைகள், என உணர்ந்து, தனக்கென சில கொள்கைகளை வகுத்து அதன்படி வாழ்ந்தாலும், கருத்துமுரன்பாடுகளின் மத்தியிலும் சமுதாய ஒட்டம் அமையவேண்டும் என்று வாழ்ந்தவர்தான எம் அடிகளார்.

ஏழைகள், அனாதைகள் மட்டில் தனிப்பட்ட பற்றும் பாசமும் கொண்டவர், தன் அர்ப்பண வாழ்வு இவர்கட்கு பணிசெய்வதில் தான நிறைவு பெறுகின்றது என்கின்ற உண்மையை ஆழமாக உணர்ந்தவர். கிறிஸ்துவின் பணி எல்லோருக்கும் விடுதலையளிக்கும் பணியாக இருந்தாலும், ஏழைகள், அனாதைகள், ஒடுக்கப்பட்டோர்பால் தனிப்பட்ட கருணை உள்ளதாக அமைந்ததுபோல் அடிகளாரின் வாழ்வும் அமைந்திருந்தது அவர் கிறிஸ்துவின் உண்மைச் சீடர் எனபதை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இப்படி பல கோணங்களில் இருந்து அடிகளாரை நாம் எடைபோடலாம். அது முக்கியமானதொன்றல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வொரு மனிதனின் வாழ்வில் நிறைந்திருக்கும் மனிதத்துவத்தைப் போற்றி, அதனை எம் வாழ்வில் கடைப்பிடிப்பதே காலத்தின் தேவையும் வரலாற்றின் கடப்பாடுமாகும். இறந்தவர்களை நினைவுகூருவது என்பது எம் கடமை என்பதற்காகவல்ல; பூமாகவாழும் எமக்காகத்தான் அவர்களை நினைவு கூருகின்றோம். இறந்தவர்களை சுமந்தவர்களும் இறந்துவிட்டார்கள். அதனை இருப்பவர்களும் எண்ணிப்பார்க்க மறந்து விட்டார்கள். அப்படி மறந்தவர்களை நினைவுபடுத்தத்தான், இறந்தவர்களை நினைவு கூருகின்றோம் என்றால் அதில் அர்த்தமுள்ளது - பொருள் உண்டு!

இறந்த எம்மடிகளாரின் வாழ்வு இறைவனில் அமைதியடைவதாக.

அருட்திரு. கி. ஜோ. ஜெயக்குமார்
இயக்குனர்.
ம.மு.ந. நிலையம் - யாழ்ப்பாணம்.

அருள்திரு கில்லறி ஜெபநேசன் அடிகளின் 1ஆம் ஆண்டு நினைவு மலரை கீவீ. முல்லை மறைக் கோட்ட மனித முன்னேற்ற நிலையத்தினர் வெளியீட் டுள்ளனர். அம்மலரின் முன் அட்டையையும் யாழ் மனித முன்னேற்ற நிலைய இயக்குனரின் செய்தியையும் மேலே காணலாம்.

ஆ-ர்

இறைவனின் படைப்புத் தொழிலில் பங்காளிகளாகிய நாம் சமூகத்தில் அர்ப்பண உணர்வு உள்ளவர்களாய் வாழ வேண்டும்

கோப்பாய் புனித சூசையப்பர் பெருவிழா 22.04.1998 அன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம் பமான நவநாள் வழிபாடுகளை அருள்திரு எட்வின் வசந்த ராசா(அ.ம.தி) அவர்கள் தூய ஆவியில் இணை வோம், அன்பின் சிறப்பு, இலக்கைநோக்கிய பயணம், திருக்குடும்பத்தின் மாதிரிகையில் எமது குடும் பங்கள், சாட்சிய வாழ்வு, ஒற்றுமைவாழ்வு, இரக்கத்தால் குணமடைவோம், மனமாற்றத்தினால் மன்னிப்பு, நற்கருணை எமது ஆன்மீக வாழ்வின் திரு உணவு எனும் கருப்பொருள்களில் அழமான மறை உரைகளால் 2000ம் ஆண்டு யூபிலி தின ஆன்மீக வாழ்விற்கு புதுப்பித்து வழி நடத்தினார்.

30.04.1998 அன்று காலை நடைபெற்ற நற்கருணை விழா திருப்பலியில் 16 சிறார்களை R.H. சகாயநாய கம் அடிகள் திருவுடல் திரு இரத்தத்தால் ஊட்ட மளித்து உற்சாக மூட்டினார். 01.05.1998 அன்று நடைபெற்ற பெருவிழா திருப்பலியில் தலைமை ஏற்று மறையுரை ஆற்றிய ஜீவா போல் அடிகள் தமது உரையில் இலாபம் பெரிது என முதலாளி வர்க்கம் வாழ்ந்தபோது அதன் உரிமைக்காக குரல் கொடுத்த தினமாகிய மேதினம் எந்த தொழிலை செய்தாலும் அதன் முழு உரிமைக்காக குரல் கொடுக்க இன்று அழைக்கிறது. வலு குறைந்த வர்கள் தாழ்ந்தவர்கள் என எண்ணப்படுவோர் இறைவன் முன்னிலையில் மதிப்பு பெறுவதை திருக் குடும்ப வாழ்வு வெளிப்படுத்துகின்றது. இறைவனின் படைப்பு தொழிலில் பங்காளிகளாகிய நாம் சமூகத் தில் அர்ப்பண உணர்வுள்ளவர்களாய் வாழ வேண் டும். அதன்போதுதான் மனச் சாட்சியின் குரலுக்கு செவிசாய்ப்பவர்களாய், உண்மை, நீதி, நேர்மை நிறைந்த மனிதமாண்பு போற்றுவோராய் மீட்புத்திட் டத்தில் பலமான கருவிகளாவோம் என்று கூறினார்.

எமது பங்குத்தந்தை அருள்திரு பிரான்சில் டானி யேல் அவர்களது ஊக்குவிப்பாலும் வழிநடத்துதலா லும் ஆலய சபை யினர் பங்குமக்களின் ஒத்துழைப்புடன் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

S.G. றூபவசந்தினி
மறை ஆசிரியர்

மனித நேயத்தை மாண்புடன் வளர்த்த அன்புத்தந்தை எறிக் றொசானின் பிரியா விடை

ஏறக்குறை ஒரு வருடத்திற்கு மேலாக எமது புனித அடைக்கலநாயகி ஆலயத்தின் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்து பிரியாத விடைபெற்று மிருசுவில் பங்கிற்கு பணியாற்றுவதற்கு சென்ற அடிகள் எறிக் றொசானின் மனிதநேயப் பணியை ஆனைக் கோட்டை பங்குமக்கள் எப்பொழுதும் மறக்க மாட்டார்கள்.

இறை வாழ்வின் விழுமியங்களுடன். அன்பையும். பண்பையும். நட்பையும் இரக்கத்தையும். பொறு மையையும் ஒன்றாகச் சேர்த்து மாண்ட வாழ்வின் ஈடேற்றத்திற்கு இவைகள்தான் எப்பொழுதும் பின் தொடருமென்று நொந்த. நொறுங்குண்ட. துன்பப் பட்ட உள்ளங்களுக்கு இறையருள் ஒளியை பாய்ச்சிவந்திருப்பதை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. அவரின் சேவையின் பால் ஈர்க்கப்பெற்ற ஆனைக்கோட்டையூர் புனித அடைக்கலநாயகி பங் குமக்கள் தமது விசுவாசத்தையும் நன்றியையும் இதய பூர்வமாக சமர்ப்பிக்கின்றோம். இயேசுபிரானின் பிரமாணிக்கத்தில் துடிப்புள்ள அருள்தந்தையாக வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

இ. வரதராசா

எஸ் ஆனந்தக்குமார் அடிகளார் வன்னிக்கு மாற்றலாகிச்செல்கிறார்

யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக அரும்பணியாற்றி வன்னிப் பகுதிக்கு மாற்றலாகிச் செல்லும் எஸ்.ஆனந்தக்குமார் அடிகளாரின்சேவையை நினைத்து பங்குமக்களால் 24.05.98 ஞாயிற் றுக்கிழமை நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது. அன்று காலை மாற்றலாகி செல்லும் ஆனந்தக்குமார் அடிகளோடு பங்குத்தந்தை A.C. கிறிஸ்தோப்பர் அடிகள் உதவிப் பங்குத் தந்தை அகஸ்ரின் இணைந்து பலி ஒப்புக் கொடுத்தார்கள். தொடர்ந்து அடிகளின் தன்ன லமற்ற சேவையை பாராட்டி நன்றியோடு சிறப் புரை ஆற்றப்பட்டது. பங்குமக்கள் சார்பில் பிரி யாவிடை நாயகருக்கு அன்பளிப்பும் வழங்கப் பட்டது. அன்று மாலை மேய்ப்புப்பணி சபையி னரால் பங்குத்தந்தை தலைமையில் சிறப்புரை களும் ஒன்றுகூடலும் தேநீர் விருந்தும் இடம் பெற்றது.

R.A. அமலரெட்னம்
பேராலயம்

புனித யுவானியார் திருவிழா

யாழ் புனித யுவானியார் ஆலய 110வது ஆண் டுத் திருவிழாத் திருப்பலி 24-06-98 அன்று காலை 6.30 மணிக்கு யாழ் மறைக்கோட்ட முதல்வர் A.C. கிறிஸ்தோப்பர் அடிகள் தலை மையில் நடைபெறும்.

28.06.98 ஞாயிறு தினம் புனித யுவானியார் ஆலய முன்றலில் (பு.நே) மாலை 3 மணிக்கு ஆலய இளைஞர் குழுமத்தின் அமைப்பில் புனித யுவானியார் ஆலயக்கட்டட நிதிக்காக சாரங்கா இசைக்குழவினர் வழங்கும் "இராஜ ராகங்கள்" எனும் இசை நிகழ்வு இடம்பெறும் அனைவரையும் ஆலய இளைஞர் மன்றத்தினர் அன்புடன் அழைக்கிறார்கள்.

ஸ்ரீத்தக்தை

யாழ் மனித முன்னேற்ற நிலையத்தில் நடந்த விழாவொன் றில் நிலைய இயக்குனர் C.G.ஜெயக்குமார் அடிகள் உரை யாற்றுவதையும் யாழ் ஆயர் வீற்றிருப்பதையும் காணலாம்.

பிரான்ஸின்

சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க ஆதரவில் குருநகரில் கல்வித் திட்டங்கள்

குருநகர் வாழ் சமூகத்தில் அக்கறை கொண்டுள்ள பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் குருநகர் இளைஞர்களும் பெரியவர்களும் குருநகர் பழையமாணவர் சங்கம் பிரான்ஸ் என்ற அமைப்பை உருவாக்கி குருநகரில் கல்வித்திட்டங்களுக்கு உதவ முன் வந்துள்ளனர். இவர்களுடைய திட்டங்களை செயல்படுத்த சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் ஒன்று ஆரம் பிக்கப்பட் டுள்ளது. இதனுடைய பணிமனை திறப்புவிழாவும், பரிசளிப்பு வைபவமும் 14.06.98 அன்று நடைபெற்றுள்ளது.

பிரான்ஸ் நாட்டுச் சங்கத்தால் வரையப்பட்ட கடிதத் திற்கு அமைவாக முன்னாள் பங்குத்தந்தை R.M.J. அடிகளின் வழி நடத்துதலில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படிக் கழகமானது தற்போ தைய பங்குத்தந்தை B.F. பொணிபொஸ் அடிகளாரின் வழிநடத்துதலில் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இதன் தலைவராக C.M. நெல்சன், செயலாளராக A.அகஸ்ரின் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

ஆரம்பக் கல்வி வளங்கள், கல்வி சம்பந்தமான கருத் தரங்கு நடாத்துதல் க.பொ.த.(சாதாரணதர) மாணவர் களுக்கு துரித மீட்டல் வகுப்புக்களை நடாத்துதல், படித்த மாணவர் களை கழகத்தில் ஆசிரியர்களாக நியமித்தல், கணணிப் பயிற்சி வழங்குதல், மாணவர்களிடையே போட்டிகள் நடாத் துதல், இரவுப் பாடசாலைகளை நடாத்துதல் போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளனர்.

தமது எதிர்கால செயற்திட்டங்கள் பலவற்றில் வீடியோ படக் காட்சி, வடி சாராயம் விற்பனை என்பவற்றை கட்டுப்படுத்து வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

யாழ் அமலமரித் தியாகிகளின் 150வது ஆண்டு நிறைவில் கலந்துகொள்ள வந்த அமலமரித்தியாகிகளின் அதி சிரேஷ்ரர் பேரருள்திரு மாசல்லோ சாகோ அ.ம.தி. புனித பத்திரிசியார் கல்லூரியில் கட்டிட அடிக்கல் நாட்டு வதையும் யாழ் ஆயர். அமலமரித் தியாகிகளின் யாழ் மாகாண முதல்வர் அருள்திரு P. யேசுநேசன் அடிகள். பத்திரிசியார் கல்லூரி அதிபர் A.I. பேனாட். அருள்திரு ஜீவனதாஸ் பெர்னான்டோ ஆகியோரையும் காணலாம்.

அமலமரித்தியாகிகளின் அதிசிரேஷ்ரர் பேராயராக அபிஷேகம் செய்யப்பட்ட தும் மறைபரப்பு சபையின் செயலா ராக நியமனம் பெற்றதும் அறிந்ததே.

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் பத்திரிகை 125 வது ஆண்டு நிறைவை நோக்கி நகர்ந்துகொண்டு இருக்கின்றது. அதனையொட்டி நடந்த ஆயத்த விழா ஒன்றில் யாழ் ஆயரும் திரு ஐயா சச்சி தானந்தம் அவர்களும் அமர்ந்திருப்பதையும் பாதுகாவலன் அச்சக பணியாளர்கள் கீதம் இசைப்பதனையும் படத்தில் காணலாம்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1998ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது P 197